**இந்தியத் துணைத் தூதரகம்**
**யாழ்ப்பாணம்**
* * *

**ஊடக அறிக்கை**
**யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் இந்தியாவின் 80ஆவது சுதந்திர தினனத்தை கொண்டாடியது.**

**1. இந்தியாவின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் 2026 ஆகஸ்ட் 15 அன்று யாழ்ப்பாண திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் கலாச்சார நிகழ்வுகளை நடத்தியது.**

**2. இவ்வாண்டின் சுதந்திரதின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இந்திய மற்றும் இலங்கை குடிமக்களுக்காக இந்தியத் துணைத் தூதரகம் மதுபனி ஓவியப் பயிற்சிப் பட்டறையையும், 'வளர்ச்சியடைந்த பாரதம் 2047' ஓவியப் போட்டியையும் நடத்தியது. இந்தியா தனது விடுதலையின் நூறாவது ஆண்டை நிறைவு செய்யும் போது அது எவ்வாறு தோற்றமளிக்கும் என்பது குறித்த தங்களது கற்பனைகளை மக்கள் ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்தினர். இந்தியாவின் 80ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் வகையில் உலகளாவிய ரீதியில் 'பாரதத்தை அறிந்துகொள்வோம்' வினாடி வினாப் போட்டியின் சிறப்புப் பதிப்பும் நடத்தப்பட்டது. இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த இலங்கையர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். இது இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மக்கள் தொடர்பை எடுத்துக்காட்டியது.**

**3. இந்தியாவின் தேசிய கீதமான வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் துணைத் தூதரக அதிகாரிகள், இந்தியக் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து வந்தே மாதரத்தை கூட்டாகப் பாடியதும், திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில்**

உள்ள இந்தியா கார்னர் இசை மாணவர்கள் மனதை நெகிழ வைக்கும் வகையில் அதனை இசைத்ததும் இதில் அடங்கும். இந்த ஆண்டு ஒவ்வொரு இந்தியரையும் தேசியக் கொடியை ஏற்றி மூவர்ணக் கொடியுடன் புகைப்படம் எடுத்துப் பதிவிடுமாறு அழைக்கும் 'ஹர் கர் திரியங்கா' என்ற உலகளாவிய பிரச்சாரமும் வட மாகாணத்தில் பெரும் பங்கேற்புடன் நல்ல வரவேற்பைப் பெற்றது.

4. மாலை நடைபெற்ற நிகழ்வில் இந்தியாவின் சென்னையை சேர்ந்த கலா அங்குரம் அமைப்பின் சிறப்புமிக்க குரு ஸ்ரீமதி கிருஷ்ணபிரியா ஜெயகர் மற்றும் குரு முனைவர் ஹிமஜா அதுல்குமார் ஆகியோரின் மாணவர்கள் பங்கேற்று பரதநாட்டியம், கதக் மற்றும் களரிப்பயிற்சி உள்ளிட்ட இந்தியக் கலை வடிவங்களின் பண்பாட்டு நிகழ்ச்சிகளை வழங்கினர். ‘பாரதத்தை அறிந்துகொள்வோம்’ வினாடி வினாப் போட்டியில் சிறப்பாகப் பங்கேற்றவர்களும் வட மாகாணத்தில் நடைபெற்ற ‘வளர்ச்சியடைந்த பாரதம் 2047’ ஓவியப் போட்டியின் வெற்றியாளர்களும் விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். ‘ஒவ்வொரு இல்லத்திலும் மூவர்ணக் கொடி’ என்ற தலைப்பில் அமைக்கப்பட்ட கண்காட்சியுடன் நிகழ்வு நிறைவுற்றது. இக்கண்காட்சியில் இந்திய தேசியக் கொடியின் வரலாறும் அதன் சிறப்பும், இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் தேசியப் பாடல் ஆற்றிய பங்கும் காட்சிப்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம்
15 ஆகஸ்ட் 2026